

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 294 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 22 – வெள்ளிக்கிழமை 05 ஜூன் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 294 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 22 - Friday 05 June 2026 - Chennai 12 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டில் நிரப்பப்படாமல் உள்ள 152 உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு இடங்கள்!

# அகில இந்தியத் தொகுப்பிற்கு சரண்டர் செய்வதைத் தடுத்திடுக!

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – த.வெ.க. அரசுக்கு கடிதம்!

**சென்னை, ஜூன் 5-**

**தமிழ்நாட்டில் நிரப்பப்படாமல் உள்ள 152 உயர்சிறப்பு மருத்துவப் படிப்பு இடங்கள் அகில இந்தியத் தொகுப்பிற்கு சரண்டர் செய்யப்படுவதைத் தடுக்க வலியுறுத்தி தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

சூப்பர் ஸ்பெஷாலிட்டி என அழைக்கப்படும் “உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு”களுக்கான 152 இடங்களை “அகில இந்திய தொகுப்பிற்கு” மாற்ற வேண்டும் என மாண்பமை உச்சநீதிமன்றம் 29.05.2026 அன்று உத்தரவிட்டுள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

இந்நிலையில், தமிழ்வாணி என்பவர் தொடர்ந்த வழக்கில் தங்கள் தலைமையிலான புதிய அரசின் சார்பில் முறையான வாதங்கள் எடுத்து வைக்கப்படாத காரணத்தால் இச்சூழல் உருவாகியுள்ளது என்பது தமிழ்நாட்டின் பொது சுகாதாரக் கட்டமைப்புக்கு ஆபத்தாக அமைந்திருக்கிறது. 2025ஆம் ஆண்டு நீட் தேர்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 430 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்களுக்கு நடைபெறும் கலந்தாய்வில் உள்ள 215 இடங்கள், பணியில் உள்ள அரசு மருத்துவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்ட இடங்களில் 63 இடங்கள் மட்டுமே கலந்தாய்வுமூலம் நிரப்பப்பட்டு, இரண்டாவது கட்ட கலந்தாய்வு முடிவடைந்த நிலையில் 152 இடங்கள் காலியாக இருந்தன.



### கழக ஆட்சியில் தடுத்து நிறுத்தப்பட்டது!

கடந்த மே 27ஆம் தேதி தமிழ்நாடு அரசின் “தேர்வு கமிட்டி” இரண்டாம் கட்ட கலந்தாய்வை நிறைவு செய்த சூழலில் தமிழ்வாணி என்பவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்து, நிரப்பப்படாமல் இருக்கும் 152 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்களை அகில இந்திய தொகுப்பிற்கு மாற்ற வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார். அந்த வழக்கு விசாரணை கடந்த ஏப்ரல் மாதத்தில் 8, 10 மற்றும் 16 ஆகிய தேதிகளில் நடைபெற்ற போது தி.மு.க. அரசின் சார்பில் வெற்றிகரமாக வாதங்களை எடுத்து வைத்து, நிரப்பப்படாமல் உள்ள 152 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்கள் அகில இந்திய தொகுப்பிற்குச் செல்வதை தடுத்து வைத்திருந்தது.

### த.வெ.க. அரசு முறையாக வாதாடவில்லை!

இந்தச் சூழலில் தங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு மே 25 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, தமிழ்நாடு அரசின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், “அந்த மாணவி மேற்கோள் காட்டிடும் N. Karthikeyan Vs State of Tamilnadu என்ற தீர்ப்பு இந்த வழக்கிற்குப் பொருந்தாது” என்பதையும், “அகில இந்திய இரண்டாவது கட்ட கலந்தாய்வு நடைபெறவில்லை”, என்பதையும் “மாநில இடங்களை ஒப்படைத்த பிறகு ஒன்றிய அரசு குறைந்தபட்ச சதவிகிதத்தைக் குறைக்கக் கூடாது” என்ற தகவலையும் முறைப்படி எடுத்து வைக்கவில்லை என்று தெரிய வருகிறது. அது மட்டுமின்றி, ஒன்றிய அரசின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் குறைந்தபட்ச சதவிகிதத்தைக் குறைப்பதை பற்றி முடிவு பின்னர் எடுக்கப்படும் என்று கூறியுள்ளார். தமிழ்நாட்டின் இடங்களை ஒப்படைத்த பின்பு சதவீதத்தை குறைத்து “All India merit list”மூலம் இடங்கள் நிரப்பப்பட்டால், அது தமிழ்நாட்டின் அரசு மருத்துவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞரே “அந்த சூப்பர் ஸ்பெஷாலிட்டிக்குரிய 152 இடங்களை சரண்டர் செய்கிறோம்” என ஒப்புக்கொண்ட காரணத்தால், “நிரப்பப்படாமல் உள்ள 152 சூப்பர் ஸ்பெஷாலிட்டி இடங்களை அகில இந்திய தொகுப்பிற்கு மாற்ற வேண்டும்” என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### அரசு மருத்துவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்!

இது தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, இதயநோய், புற்றுநோய், நரம்பியல் தொடர்பான நோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் உயர்தர சிகிச்சைக்கும் பின்னடைவை ஏற்படுத்தும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து அரசுப் பணியில் உள்ள மருத்துவர்கள் உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு மேற்கொள்ளும் இட ஒதுக்கீடு, கழக அரசு எடுத்த நடவடிக்கைகளால் 2022இல் மீண்டும் உறுதி செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு மேற்கொண்டு கிராமப்புற மக்களுக்கும் உயரிய மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கு மிக முக்கியமான காரணியாக இருந்துள்ளது. அந்த இட ஒதுக்கீட்டு உரிமை தற்போது தங்கள் அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் உரிய வாதங்களை எடுத்து வைக்காத காரணத்தால் பறிபோகும் சூழல் எழுந்துள்ளது வேதனையாக இருக்கிறது.

ஆகவே முதலமைச்சராகிய தாங்கள் உடனடியாக தலையிட்டு, தமிழ்நாட்டில் நிரப்பப்படாமல் உள்ள 152 உயர் சிறப்பு மருத்துவ படிப்பு இடங்களும் அகில இந்திய தொகுப்பிற்கு சரண்டர் செய்யப்படுவதை தடுத்து, தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பணி மருத்துவர்கள் அந்த உயர் சிறப்பு மருத்துவ படிப்புக்குரிய இடங்களில் சேருவதற்கான சூழலை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (04.06.2026) அவரது இல்லத்தில் சந்தித்த தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமைச் சேர்ந்த மக்கள் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டி கடந்த திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொண்ட தொடர் முயற்சிகளுக்காக நன்றி தெரிவித்தனர். மேலும், இதற்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வகையில் உதவுமாறும் கோரினர்.

### மின்வெட்டுப் பிரச்சினையை திசை திருப்ப

# ‘டெண்டரில் முறைகேடு’ என குற்றச்சாட்டு!

### த.வெ.க.அமைச்சருக்கு – முன்னாள் மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி பதிலடி!

*கோவை, ஜூன் 5-*

*மின்வெட்டு பிரச்சினையை உடனடியாக சரி செய்ய முடியாத வகையில் திறனற்ற அரசாக த.வெ.க. அரசு உள்ளது என்று முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றம் சாட்டியுள்ளார். பிரச்சினையை திசை திருப்ப டெண்டரில் முறைகேடு என்று தவறாகக் கூறுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*கோவையில் செய்தியாளர்களை சந்தித்த கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜி, சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டை கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர் என கூறினார்.*



*மின்வெட்டு பிரச்சினை தொடர்பாக த.வெ.க. அரசு இதுவரை ஒரு ஆய்வுக்கூட்டம் கூட நடத்தவில்லை என்றும், மின்வெட்டை சரி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். பல்வேறு காரணங்களை கூறி மின்வெட்டு பிரச்சினையை த.வெ.க. அரசு திசைதிருப்ப முயற்சிப்பதாக கூறிய செந்தில் பாலாஜி, டெண்டரில் முறைகேடு என தவறான பிம்பத்தை உருவாக்க முயல்கின்றனர் என்றும் சாடினார்.*

*த.வெ.க. அமைச்சர்களுக்கு நிர்வாகத் திறனே இல்லை என்பது வெளிப்பட்டு, மக்களின் நன்மதிப்பை இழந்துள்ளது என்றும் அமைச்சரே தன்னை யாரோ மிரட்டுவதாக கூறுவதன்மூலம், சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ளலாம் என்றும் செந்தில் பாலாஜி விமர்சித்துள்ளார்.*

*இது ரியல் ஆட்சியல்ல; ரீல்ஸ் ஆட்சிதான், ஆடத்தெரியாமல், வீதி கோணல் என்று சொல்கிறார்கள் தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டை கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். மின்வெட்டு பிரச்சினையை திசை திருப்பும் த.வெ.க. அரசு டெண்டரில் முறைகேடு என தவறான பிம்பத்தை உருவாக்க முயல்கின்றனர் - என்றும் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.*

## சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அடிக்கடி மின்தடை!

# த.வெ.க. ஆட்சியில் ‘அறிவிக்கப்படாத மின்வெட்டு’!

### மக்கள் அவதி – முற்றுகைப் போராட்டம்!

**சென்னை, ஜூன் 5-**

**சென்னையின் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு காரணமாக பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். பல்வேறு இடங்களில் மின்வாரிய அலுவலகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் இதே நிலை உள்ளது.**

த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவி வருகிறது. தலைநகர் சென்னையிலும் தொடரும் மின்வெட்டால் மக்கள் பரிதவித்து வருகின்றனர். கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜமாலியா ஹவுசிங் போர்டு, மதுரைசாமி மடம் தெரு, சபாபதி தெரு உள்ளிட்ட பகுதிகளில் பல மணி நேரமாக மின்தடை நீடிக்கிறது. பகல் மட்டுமல்ல இரவு நேரத்திலும் மின்வெட்டு தொடருவதால், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

ஏற்கனவே கோடை காலம் ஒருபுறம், மறுபுறம் த.வெ.க. அரசின் அறிவிக்கப்படாத மின்வெட்டால் தமிழ்நாட்டு மக்களை இருளில் தள்ளியதோடு, இரவு நேரத்தில் தூங்க முடியாமலும் தவித்து வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் நகராட்சிக்கு உட்பட்ட 13வது வார்டு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றி அடிக்கடி பழுதடைவதால், தொடர் மின்வெட்டுக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இரவு நேரங்களில் மின்சாரம் முற்றிலும் துண்டிக்கப்பட்டு வருவதால், பொதுமக்கள் இரவில் தூக்கத்தை இழந்து தவிப்பதுடன், கொசுக்கடியில் வீட்டிற்கு வெளியே தெருவில் தூங்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மின்துண்டிப்பை சரி செய்யுமாறு புகார் அளித்தால், மின்வாரிய அதிகாரிகள் அலட்சியம் காட்டுவதாக குற்றம்சாட்டியுள்ள பொதுமக்கள், அடிக்கடி பழுதாகும் பழைய மின்மாற்றியை மாற்றி, புதிய உயர்தர மின்மாற்றியை அமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மணலி, திருவொற்றியூர்

மணலி, திருவொற்றியூர் பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு நிகழ்வதால் மக்கள் தவித்து வருகின்றனர்.

இதேபோல், சென்னை மணலி மற்றும் திருவொற்றியூர் பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு நிகழ்வதால் மக்கள் செய்வதறியாமல் தவித்து வருகின்றனர். மணலியில் டிரான்ஸ்பார்மரில் இருந்து செல்லக்கூடிய ஒயர் எரிந்து மின்சாரம் துண்டித்ததால் சம்பவ இடத்துக்கு வந்து மின்வாரிய அதிகாரிகள் சரி செய்யும் பணியில் ஈடுபட்ட போது த.வெ.க. நிர்வாகிகள் அவர்களுடன் வாக்குவாதம் செய்தனர். மின்வாரிய ஊழியர்களை பணி செய்யவிடாமல் தடுத்த த.வெ.க.வினருக்கு பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### முடிச்சூர் – செங்கல்பட்டு

மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள் இதேபோல், சென்னை தாம்பரம் அடுத்த பழைய பெருங்களத்தூர், பார்வதி நகர், முடிச்சூர், வரதராஜபுரம், அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது.

சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக மின்தடை நீடிப்பதாகவும் இதன் காரணமாக குடிநீர் விநியோகம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் பாதிக்கப்பட்டதாகவும் பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்நிலையில், நேற்றிரவும் அப்பகுதியில் நான்கு மணி நேரத்திற்கு மேலாக மின்வெட்டு நீடித்தது. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் முடிச்சூர் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதுதவிர பல்வேறு இடங்களில் குறிப்பாக திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மணிக்கணக்கில் அறிவிக்கப்படாத மின்வெட்டு இருப்பதால் மக்கள் சொல்லொணா துயருக்கு ஆளாகி வருகின்றனர். ஆங்காங்கு மழைப் பெய்வதாலும் மின்வெட்டால் மக்கள் அவதிக்கு உள்ளாகின்றனர்.